தேதி - **06.10.2025.**

**Pro**.**OP**.146/2023

**Pw**.1 - திருமதி. ப்ரீத்தா விக்னேஷ்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை

நான் இந்த மனுவில் 1ம் மனுதாரர். 2ம் மனுதாரரும், எதிர்மனுதாரரும் என் உடன் பிறந்த சகோதரிகள். குட்டுவா என்பது எங்கள் குடும்ப பெயர். தாவா உயில் பதிவு செய்யப்படாதது. தாவா உயிலில் குறிப்பிடப்பட்டுள்ள 1 மற்றும் 2 இலக்க சொத்துக்கள் என்னுடைய தாத்தா கிரையம் பெற்ற சொத்துக்கள் ஆகும். தாவா சொத்து என்னுடைய தாத்தாவால் பதிவு செய்யப்பட்ட உயில் ஒன்றின் மூலமாக மகேஷ்வரனுக்கு கிடைக்கப்பெற்றது என்று சொன்னால் அது சரிதான். என் அப்பாவுடன் பிறந்தவர்கள் அனுராதா மற்றும் கிரிஜா. என்னுடைய தாத்தா வாசுதேவன் மருத்துவர். என்னுடைய தகப்பனார் தாவா உயிலை எழுதி வைத்ததாக பொய்யாக கூறியுள்ளேன் என்று சொன்னால் அது சரியல்ல. தாவா உயில் எழுதப்பட்டதாக சொல்லப்படும் தேதியில் என் தகப்பனார் புற்றுநோயால் பாதிக்கப்பட்டு படுத்த படுக்கையாக இருந்தார் என்று சொன்னால் அது சரியல்ல. தாவா உயிலில் சாட்சியாக குறிப்பிடப்பட்டுள்ள அமர்நாத் மற்றும் பிரேம்நாத் என்னுடைய தகப்பனாருடைய ஆடிட்டர்கள். வருமான வரி கணக்கு தாக்கல் செய்ய என் தகப்பனாரிடம் மேற்படி ஆடிட்டர்கள் கையெழுத்து பெறுவதுண்டு என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. 09.04.2017ம் தேதியன்று என் தகப்பனார் இறந்துவிட்டார். தாவா உயிலை என் தகப்பனார் உண்மையில் எழுதியிருந்தால் அதை பதிவு செய்து வைத்திருப்பார் என்று சொன்னால்

அவர் ஏன் பதிவு செய்யவில்லை என்று எனக்கு தெரியவில்லை. என் அம்மா எப்போது இறந்தார் என்று கேட்டால் 09.06.2023ம் தேதியன்று இறந்துவிட்டார். 07.07.2023ம் தேதி என் 2ம் மனுதாரர் எனக்கு அதிகார முகவர் பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார். அந்த **அதிகார முகவர் பத்திரத்தின்** ஆன்லைன் நகல் என்னிடம் காண்பிக்கப்படுவது தான். அது **எ.ம.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எ.ம.சா.ஆ.1ல் பிரிவினை இல்லாத 1/3 பாகம் என குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் அதில் அவ்வாறு தான் உள்ளது. அந்த அதிகார முகவர் பத்திரம் எ.ம.சா.ஆ.1 –ஐ 14.07.2023ம் தேதி 2ம் மனுதாரர் ரத்து செய்துவிட்டார். அது சம்பந்தமான ஆன்லைன் நகல் என்னிடம் காண்பிக்கப்படுவது தான். அது **எ.ம.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எ.ம.சா.ஆ.1 மற்றும் 2–ல் என் கணவர் விக்னேஷ் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார் என்று சொன்னால் அது சரிதான்.

உண்மையில் என் தகப்பனார் தாவா உயிலை எழுதி வைத்திருந்தால் எ.ம.சா.ஆ.1 மற்றும் 2 எழுதப்படவேண்டிய அவசியம் இல்லை என்று சொன்னால் அது சரியல்ல. தாவா உயில் இந்த வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம் என்று சொன்னால் அது சரியல்ல. இந்த வழக்கிற்கு பின் நிரந்தர உறுத்துக்கட்டளை கேட்டு 2ம் கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் எதிர்மனுதாரருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். அந்த வழக்கில் இந்த மனு பற்றி எதுவும் சொல்லவில்லை. எதிர்மனுதாரர் வேறு சமூகத்தைச் சார்ந்தவரை திருமணம் செய்து கொண்டார் என்று சொன்னால் அது சரிதான். அந்த காரணத்தால் அவருக்கு சொத்து எதுவும் செல்லக்கூடாது என்பதற்காக தாவா உயில் மோசடியாக உற்பத்தி செய்யப்பட்டது என்று சொன்னால் அது சரியல்ல. ஆடிட்டர் இருவரும்

எங்கள் சமூகத்தைச் சார்ந்தவர்கள் என்று சொன்னால் அது சரிதான். அதனால் அவர்கள் உதவியுடன் தாவா உயிலை மோசடியாக உற்பத்தி செய்துள்ளேன் என்று சொன்னால் அது சரியல்ல. தாவா உயிலை என் தகப்பனார் எழுதியிருக்க முடியாது என்று சொன்னால் அது சரியல்ல.

Sd/- ப்ரீத்தா விக்னேஷ்

திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

Sd/- G.Muthukumaran
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
மதுரை.